# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.18/2020.
Prosecution witness for P.W.12.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. சுப்பிரமணியன். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.11.2025.

A2, 5 and 8 died. A6, 7, 9, 10 absent. 317 Crpc petition filed. Others present.

முதல் விசாரணை

நான் தற்போது ஆதிச்சநல்லூரில் குடியிருந்து கிரேன் ஆப்ரேட்டராக தொழில் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஆவணங்களில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதல்ல. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. என்னிடம் கையொப்பமும் பெறவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது. சாட்சி மேற்கொண்டு விசாரணை செய்யப்படுகிறார்.

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், போலீஸ் விசாரணையில் 25.12.2015 அன்று பகல் 3 மணியளவில் போலீசார் கால்வாய் ஊருக்குள் தேவர் சிலை அருகில் நின்று கொண்டிருந்த 5ம் எதிரியை போலீசார் கைது செய்து விசாரித்தபோது 5ம் எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை என் முன்பாகவும், மல்லையா என்பவர் முன்பாகவும் பதிவு செய்து எங்களிடம் கையொப்பம் பெற்றதாகவும், 29.12.2015 அன்று பகல் 12 மணியளவில் திருநெல்வேலி மாவட்ட நீதிமன்ற பேருந்து நிறுத்தம் அருகில் நின்று கொண்டிருந்த 6ம்

எதிரியை போலீசார் எங்கள் முன்பாக கைது செய்து விசாரித்தபோது 6ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நாங்கள் கையொப்பமிட்டதாகவும், அதன் அடிப்படையில் 6ம் எதிரி கால்வாய் கிராமத்தில் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று ஆஜர் செய்த ஒரு இருசக்கர வாகனத்தையும், ஒரு அரிவாளையும் ஆஜர் செய்ததை போலீசார் எங்கள் முன்பாக மகஜரில் கைப்பற்றி எங்களிடம் கையொப்பம் பெற்றதாகவும் சொல்லியுள்ளேன் என்றும், தற்போது எதிரிகளுக்கு பயந்துகொண்டு பொய்சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

குறுக்குவிசாரணை

இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN

Digitally signed by M THANDAVAN
Date: 2025.11.19 16:58:08 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.